# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண். 128/2017/பே
ஆணை நாள். 24–12–2018

திரு மு. ராமகிருஷ்ணன்,
48/60, தெற்கு புதுத் தெரு,
திருச்செந்தூர்,
தூத்துக்குடி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.

1.செயல் அலுவலர்,
திருச்செந்தூர் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.
2.திரு.பூவையா,
சுகாதார ஆய்வாளர்,
சிறப்பு நிலை பேரூராட்சி,
திருச்செந்தூர். --- எதிர் மனுதாரர்கள்.

## ஆணை.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தெற்கு புதுத் தெரு, எண். 48/60ல் வசிக்கும் திரு.மு.ராமகிருஷ்ணன் என்பவரது 03.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2017ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 128/2017 என எண்ணிடப்பட்டு, மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது பல்வேறு புகார்களை தெரிவித்தும், இப்புகார்கள் தொடர்பாக மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதார ஆய்வாளர், இளநிலை எழுத்தர்கள் வரிவசூலர்கள் மற்றும் தீயணைப்புத் துறை பணியாளர்கள் ஆகியோரை விசாரிக்கக் கோரியும் தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 09.06.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 28.09.2017 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தில் 11.12.2017 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சாட்சிகள் இருவர்,

திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.10.2017 நாளிட்ட அறிக்கை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

11.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் கடந்த 6 மாத காலமாக திருச்செந்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், முறையீட்டு மனு தொடர்பாக அலுவலகத்தில் கோப்பு ஏதும் தற்போது இல்லை எனவும், அனைத்து ஆவணங்களும் தூத்துக்குடி லஞ்ச ஒழிப்புத் துறையில் உள்ளதாகவும், தான் நேரடியாக சம்பந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்து விசாரித்ததாகவும், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருப்பதாக சொன்னதாகவும், மேற்படி ஆவணங்களை ஒரு வாரத்தில் தருவதாக சொன்னதாகவும், அதனை பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார். புகார்–2, தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதில் அந்த நிலம் பேரூராட்சி நிலமா என்பது நில அளவைகள் செய்து பரிசீலிக்க வேண்டியுள்ளதாலும், அனைத்து ஆவணங்களும் லஞ்ச ஒழிப்புத் துறையில் இருப்பதால் தங்களால் ஆதாரப் பூர்வமாக தற்போது விரிவான பதில் சமர்ப்பிக்க இயலவில்லையெனவும், ஆறு நபர்களுக்கு நீதிமன்ற உத்திரவிற்கு பின் கடை வழங்க இயலவில்லையெனவும், எனவே அங்குள்ள உணவகத்தை ஆறு நபர்கள் பிரித்துக் கொள்ளுமாறு அப்போதைய செயல் அலுவலர் திரு.சுப்புராஜ் கூறியுள்ளதாகவும், அனைத்துக் கோப்புகளையும் லஞ்ச ஒழிப்புத் துறை எடுத்துச் சென்றுள்ளதால், தன்னால் பரிசீலிக்க இயலவில்லையெனவும் தெரிவித்துள்ளார். திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தின் உள்ளே 10x15 அடி அளவுள்ள கடை அப்போதைய செயல் அலுவலர், ஓர் ஆண்டுக்கு பால் விற்பனைக்காக கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் அவர் அனுமதிக்கப்பட்ட இடத்தினை விட அதிகமாக ஆக்கிரமிப்பு செய்து ஆணை பெற்றதற்கு மாறாக கடை வைத்துள்ளதாகவும் அதை எடுத்துவிட்டு முறையீட்டு மனுதாரர் திரு.இராமருஷ்ணன் அவருடைய மகன் திரு. சரவணனுக்கு 1.12.2014 முதல் 30.11.2015 வரை ஓர் ஆண்டு கடை அனுமதிக்கப்பட்டதாகவும், ரூ.1,500/– மாத வாடகை செலுத்தி வருவதாகவும், 31.12.2015 அன்று கடையினை காலி செய்யவேண்டிய நிலையில், கடையினை காலி செய்யவில்லையெனவும், உரிய உத்திரவின்றி தொடர்ந்து கடை நடத்தி வருவதாகவும், அதே ரூ. 1,500/– வாடகை செலுத்தியுள்ளதாகவும், ஓர் ஆண்டிற்கும் மேலாக கடை வாடகை செலுத்தவில்லை எனவும், ஆனால் கடை நடத்தி வருவதாகவும், மற்றவர்களுக்கு நிரந்தர கடைகள் மூன்று ஆண்டுகளுக்கு கொடுத்துள்ளதாகவும், காரணம் மூன்று ஆண்டுகள் குத்தகை முடிந்தவுடன், அதற்கு பின்பு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 5 சதவீதம் என மொத்தம் 9 ஆண்டுகளுக்கு கடை குத்தகைக்கு வழங்கலாம் என தனது வாக்குமூலத்தில் திருச்செந்தூர் பேரூராட்சி செயல்அலுவலர் தெரிவித்துள்ளார்.

11.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருச்செந்தூர் பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளர் திரு.பூவையா, தனது வாக்குமூலத்தில் தான் கடந்த ஏழு ஆண்டுகளாக திருச்செந்தூர் பேரூராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிவதாகவும், திரு.இராமகிருஷ்ணன் என்பவர் பேரூராட்சியினை எதிர்த்து தொடர்ந்து புகார் மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர், உதவி இயக்குநர் ஆகியோர்களுக்கு அனுப்புவார் எனவும், ஒரு நாள் முன்னாள் செயல் அலுவலர் அவரை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், செயல் அலுவலர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடந்ததாகவும், 2005–ஆம் ஆண்டு பழைய பேருந்து நிலையத்தினை எடுத்து விட்டு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டதாகவும், அதில் மனுதாரர்

திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் பால் நிலையம் நடத்தி வந்ததாக செயல் அலுவலருக்கு தெரிவித்ததாகவும், தனக்கு மீண்டும் இந்த பால் விற்பனை நடத்துவதற்கு அதே இடம் வேண்டும் என அனுமதி கேட்டதாகவும், இதற்கு அப்போதைய தலைவர் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார். மீண்டும் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடந்ததாகவும், அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர்களை திரு. ராமகிருஷ்ணன் அழைத்து தனக்கு இந்த கடையினை கொடுத்து விட்டால் புகார் மனுக்கள் போடுவதை நிறுத்தி விடுவார் என தெரிவித்ததாகவும், அந்த நபர்கள் யாரும் தற்போது இப்பேரூராட்சியில் இல்லை எனவும் திரு.சுப்புராஜ், செயல் அலுவலர் மேற்படி இடத்தை ஆய்வு செய்து தனது கருத்தினை தெரிவிக்குமாறு கேட்டதாகவும், தான் ஆய்வு செய்து விட்டு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ஒட்டிய இடத்தில் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் உள்ளேதான் மேற்படி இடம் இருந்ததாகவும், மனுதாரர் மேற்கு பகுதியில் தென்மேற்கு திசையில் இடம் கேட்டதாகவும், மனுதாரர் கேட்ட இடத்திலேயே திரு.சுப்புராஜ், செயல் அலுவலர் கடை ஒதுக்கி கொடுத்ததாகவும், இவரது கடைக்கு தெற்கு பக்கமும் மேற்கு பக்கமும் சிலர் அசிங்கம் செய்வதால் தானே அதை சரி செய்து கொள்கிறேன் என செயல் அலுவலரிடம் தெரிவித்ததாகவும், மேற்படி இடத்தை சுத்தப்படுத்தி தனது கடையினை விரிவாக்கிக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். அவர் விரிவாக்கம் செய்த பகுதிகளை ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு செய்த பகுதியினை அறிக்கை தர வருவாய்க் கோட்டாட்சியர் கூறியதின் அடிப்படையில் தன்னை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்க சொன்னதாகவும், தான் ஆக்கிரமிப்பு செய்த பகுதியில் குறியீடு செய்ததால் தன் பெயரை புகார் மனுவில் சேர்த்துள்ளதாகவும், செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநரிடம் தற்காலிக தடையாணை உயர் நீதி மன்றத்தில் பெற்றுள்ளதாக காட்டியும், இறுதியில் ஆக்கிரமிப்பை அவரே அகற்றி விட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

11.12.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ராமகிருஷ்ணன், தனது வாக்குமூலத்தில், தனது மனுவில் 35 புகார்களை தெரிவித்துள்ளதாகவும், திருச்செந்தூர் பேரூராட்சி 19–வது வார்டு, குமாரபுரம் அன்பு நகரில்' ஏ' மற்றும் `டி` வரை காலனிகள் உருவாக்கப்பட்டதாகவும் 'ஏ' காலனியில் பொதுப் பயன்பாட்டிற்கு நிலங்கள் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், 'பி' காலனி உருவாக்கும் போது 'ஏ' காலனியில் பேரூராட்சிக்கு பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை சம்பந்தப்பட்ட நிலத்தின் முன்னாள் உரிமையாளர் ஏற்கனவே நிலத்தை பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்த அந்த நபர் அதே நிலத்தை 'பி' காலனியில் உருவாக்குவதற்காக மறு விற்பனை செய்துள்ளதாகவும், சுமார் 10 மீட்டர் நீளம் 7 மீட்டர் அகலமுள்ள அந்த நிலம் மறு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிகழ்வு 2014–ஆம் ஆண்டு நடந்தது எனவும், இதன் மதிப்பு அந்த நேரத்தில் 436 சதுர அடி (1 சென்ட் ) ரூ.2.50 லட்சம் ஆகும் எனவும், இந்த நில உரிமையாளருக்கு நில விற்பனை அதிகரிக்க செய்யும் வகையில் ரூ.20.00 லட்சம் செலவில் பூங்கா அமைத்துக் கொடுத்தும், பேரூராட்சி சார்பாக அந்த இடத்தில் 100 மரங்கள் அமைத்து பராமரிப்பு செய்து வந்ததாகவும், இந்த மரங்கள் 2016 ஆம் ஆண்டு வைத்ததாகவும், ஒரு ஆறு மாதம் வரை பராமரித்து வந்ததாகவும், அதன் பிறகு பராமரிக்கவில்லை எனவும் இந்த பூங்கா அமைப்பதற்கு பேரூராட்சியில் உள்ள விடுதி உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் ஆகியோரிடம் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பணம் வசூலித்ததாகவும், மற்ற பிற செலவுகள் பேரூராட்சி மூலமே செய்ததாகவும் பூங்கா அமைக்கும் போது திரு.கண்ணன் என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும், அவர் உதவி இயக்குநராக பதவி உயர்வு பெற்று சென்று விட்டதாக நினைப்பதாகவும், தற்போது எங்கு இருக்கிறார் என்பது தனக்கு தெரியாது எனவும்

தெரிவித்துள்ளார். தனது புகார் மனுவினை திரு.சுப்புராஜ், செயல் அலுவலர் அவர்கள் படித்து பார்த்து விட்டு சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அவர்களிடம் ஆதாயம் பெற்றுவிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் முடித்து விட்டதாகவும், மேற்படி திரு.சுப்புராஜ், தற்போது உயிருடன் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். புதிய பேருந்து நிலையத்தில், பழைய பேருந்து நிலையத்தில் கழிவறை வைத்திருந்தவர்களுக்கும், பொம்மை கடை வைத்திருந்தவர்களுக்கும் வாடகை அடிப்படையில் கடைகள் கொடுத்துள்ளதாகவும், யார் யார் பெயருக்கு கடைகள் கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தினை ஒரு வாரத்தில் அனுப்பி வைப்பதாகவும், ஏலம் விடாமல் விதிகளை மீறி அவர்களுக்கு சலுகை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சன்னதி தெருவில் தெலுங்கு ரெட்டியார் மடத்தில் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் சுமார் ரூ.60.00 கோடி மதிப்புள்ள நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்த புகாரினை கவனிக்காமலும், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் புதிய கட்டிடம் கட்ட மடத்திற்கு அப்போதைய செயல் அலுவலர் அனுமதி கொடுத்துள்ளதாகவும், இதற்கான உரிய ஆதாரத்தினை சமர்ப்பிக்க தயாராக உள்ளதாகவும், இவ்வாதாரத்தினை ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். திருச்செந்தூர் பேரூராட்சியில் மொத்தம் 851 மின் கம்பங்கள் உள்ளதாக மின்சார வாரியத்தினர் தெரிவித்துள்ளதாகவும், பேரூராட்சி நிர்வாகம் 2,285 எண்ணிக்கையிலான மின் கம்பங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள விவரம் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தன்னால் பெறப்பட்டது எனவும், இவைகளின் பராமரிப்பிற்காக உபகரணங்கள் வாங்குவது போன்றவற்றில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ரூ.10.00 லட்சம் ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகவும், பேரூராட்சியில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாக தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இழப்பீடு ஏற்பட்டிருப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

11.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திரு.கே.எஸ்.ஜெயந்திநாதன் தனது வாக்குமூலத்தில், தான் 2001–2006 கால கட்டத்தில் பேரூராட்சி மன்ற உறுப்பினராக இருந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் முதலில் சைக்கிள் கடை வைத்திருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து பெட்டிக்கடை வைத்திருந்ததாகவும், 2005–ஆம் ஆண்டு இவருக்கு ஆவின் பாலகம் நடத்த பழைய பேருந்து நிலையத்தில் ஒரு இடம் கேட்டு அதனை கொடுத்தாகவும், 2007–ஆம் ஆண்டு பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக கடைகளை காலி செய்ததாகவும், அங்கு காலி செய்த நபர்கள் அனைவருக்கும் தற்காலிக கடைகள் வழங்கப்பட்டதாகவும், 2007–ஆம் ஆண்டு பேருந்து நிலையம் உருவானதாகவும், அதில் சில நபர்களுக்கு மட்டும் கடை வழங்கப்பட்டதாகவும், இதில் திரு.ராமகிருஷ்ணன் உட்பட 7 நபர்களுக்கு கடைகள் வழங்கப்படவில்லை எனவும், சில நபர்கள் பேரூராட்சியில் பேச்சு வார்த்தை மூலமாக கடையினை பெற்றதாகவும், முறையீட்டு மனுதாரர் கடையினை பெற்று Travels and Coffee கடை வைத்ததாகவும், தற்போது காபி கடை இல்லாமல் வெறும் Travels கடை மட்டும் நடத்தி வருவதாகவும், தானும் முறையீட்டு மனுதாரர் மற்றும் மற்றொரு உறுப்பினர் திரு. பாஸ்டின் ஆகியோர் பேரூராட்சி தலைவர் மீது புகார் மனு அளித்தும், வழக்கு தொடுத்தும், லஞ்ச ஒழிப்புத் துறையிலும் மனு கொடுத்தாக தெரிவித்துள்ளார். திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.சரவணன் கடை வாங்கியுள்ளதாகவும், மேற்படி புகார் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் தானும் சேர்ந்து தான் இந்த மனுவினை அனுப்பியதாகவும், தூத்துக்குடி லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சாட்சியம் அளித்ததாகவும், மேற்படி துறை அலுவலர்கள் பேரூராட்சி அலுவலகத்தில் 40 நாட்கள் ஆய்வு மேற்கொண்டதாகவும், மேற்படி விசாரணையில் தாங்கள் அளித்த வாக்குமூல நகல் கோரியதாகவும், ஆனால் மேற்படி அலுவலர்கள் முன்னாள்

பேரூராட்சி மன்றத் தலைவர் மீது விரிவான விசாரணை நிலுவையில் உள்ளது எனவும் வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். திரு.ராமகிருஷ்ணன் அளித்த வாக்குமூலத்தினை தன்னுடைய வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளக் கோரியும், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு லஞ்ச ஒழிப்புத் துறைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தங்களால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு குறித்த விவரங்களை அனுப்பி வைப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 15.12.2017 நாளிட்ட அறிப்பாணையில் திரு.ராமகிருஷ்ணன் முறையீட்டு மனுதாரர் முறையீட்டு மனு தொடர்பாக திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 11.012.2017 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள இடங்களை நேரில் ஆய்வுமேற்கொண்டு, ஆவணங்களை பரிசீலித்தும், பேரூராட்சி கடைகள் ஏலம் குறித்தான விவரங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் நிலுவை குறித்தான அறிக்கையினையும் சமர்ப்பிக்கத் தெரிவித்து பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

திரு.இராமகிருஷ்ணன் தனது 23.12.2017 நாளிட்ட கடிதத்தில் 11.12.2017 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விவரங்களுக்கான ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

11.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2018 அன்று ஆஜரான திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், திரு.வி.இராமகிருஷ்ணன் மற்றும் திரு.ஆர்.சரவணன் இருவரின் புகார் மனுக்கள் குறித்து விவரம் தெரியும் எனவும், இருவரும் தொடர்ந்து புகார்கள் எழுதும் பழக்கம் உள்ளவர்கள் எனவும், திரு.சரவணன், த/பெ திரு.இராமகிருஷ்ணன், என்பவரின் கடையினை தான் காலி செய்து விட்ட ஆதங்கத்தில் விரோதமாக தன் மீது புகார் அனுப்புகிறார்கள் எனவும் தினமும் காலையில் பேரூராட்சி அலுவலகம் திறக்கும் முன்னர் பேரூராட்சி அலுவலகத்தில் வந்து அங்கு என்ன நடக்கிறது என கண்காணிப்பது அவர்களின் முழு பணி எனவும், மனுதாரர் திரு.சரவணன் என்பவரால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் கீழ்க்கண்டவாறான வழக்குகள் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

1. வழக்கு எண். W.P.(MD) No. 7215/2018 – கடை உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக.
2. வழக்கு எண். W.P.(MD)No. 13974/2018 – கடையினை அகற்றியமைக்கான இழப்பீடு கோருதல்.

திரு.இராமகிருஷ்ணன் என்பவரின் 03.06.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள 35 எண்ணிக்கையிலான புகார்களுக்கான இடைக்கால பதில் தன்னால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி புகார்கள் குறித்த தற்போதைய நிலையின் விவரத்தினை அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்தும், கள ஆய்வு மேற்கொண்டும் புகார் வாரியாக உரிய ஆதரங்களுடன் அறிக்கையினை சமர்ப்பிப்பதாக திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

25.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையினைத் தொடர்ந்து திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.12.2018 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனுதாரரின் பல்வேறு புகார்களுக்கான விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

1. திருச்செந்தூர் பேரூராட்சி 19–வது வார்டு குமாரபுரம் அன்பு நகர் 'A' மற்றும் 'B' காலனி நகர் ஊரமைப்புத்துறை அனுமதி பெறப்பட்டு, பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய கட்டணம்

ரூ.4.39 லட்சம் செலுத்தப்பட்டு, மேலும் சாலை, பூங்கா மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கு நிலங்கள் பேரூராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தில் தன்னிறைவுத் திட்டம் 2015–16 ஆம் ஆண்டு திட்டத்தில் பொது மக்கள் பங்களிப்புடன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ஆணை ந.க.எண்.ஆ.12/4600/2015/நாள்,13.01.2016ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தூத்துக்குடி மாவட்ட உதவி செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு திருச்செந்தூர் பேரூராட்சி அறிவிப்பு ந.க.எண். 565/2015/நாள் 29.01.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சி மூலம் பூங்கா அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள திருச்செந்தூர் பேரூராட்சி 6–வது வார்டு சன்னதி தெருவில் இயங்கி வரும் தெலுங்கு ரெட்டியார் மடத்தை அளவீடு செய்ய திருச்செந்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு, திருச்செந்தூர் பேரூராட்சி கடித ந.க.எண்.741/2017/நாள். 12.10.2018ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், நாளது தேதி வரை மேற்படி அளவீடு அறிக்கை பெறப்படவில்லை எனவும் அறிக்கை பெற்ற பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள திருமதி. கமலா என்பவர் பழைய பேருந்து நிலையத்தில் கடை நடத்தி வந்ததாகவும், புதிய பேருந்து நிலைய கட்டிடப் பணிகள் முடிவடைந்த பின்னர் அனைத்துக் கடைகளும் ஏலம் விடப்பட்டதைத் தொடர்ந்து, திருமதி.கமலா என்பவருக்கு கடை வழங்காத நிலையில், மேற்படி நபர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நீதிப்பேராணை எண். 4981/2010 மற்றும் 4982/2010 நாள் 06.10.2010ல் வழங்கிய தீர்ப்பில் மேற்படி நபருக்கு கடை வழங்க தெரிவிக்கப்பட்டதாகவும், பேருந்து நிலையத்தில் காலியாக இருந்த கடை ஏலம் விட திருச்செந்தூர் பேரூராட்சி அறிவிப்பு ந.க.எண்.1083/2013/நாள் 10.12.2013, 30.01.2014, 17.06.2014 மற்றும் 03.11.2014 ஆகிய தேதிகளில் ஏலம் விடப்பட்டு, எவராலும் ஏலம் கோரப்படவில்லை எனவும், நீண்ட நாட்களாக கடை வேண்டி விண்ணப்பம் செய்து வந்த நிலையிலும், பேரூராட்சியின் வருவாய் இழப்பை சரி செய்யவும் மேற்படி நபரால் அச்சமயம் சந்தை மதிப்புக்கு வைப்புத் தொகை ரூ.45,000/– செலுத்தி கடை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் சந்த சஷ்டி திருவிழா 2016, சிறப்பு சுகாதார பணிகளை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆய்வு மேற்கொண்டபோது, பேருந்து நிலையத்தில் வட புறத்தில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறை சுகாதாரக் கேடு ஏற்படுத்தும் நிலையில் இருந்ததால், மேற்படி கழிப்பறையினை உடனடியாக அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி கட்டண கழிப்பறை உரிமம் ரத்து செய்யப்பட்டு, திருச்செந்தூர் பேரூராட்சி அறிவிப்பு ந.க.எண். 9/2016/நாள்.17.10.2016ன்படி 26.10.2016 அன்று ஏலம் கோரப்பட்டதாகவும், ஒரு நபர் மட்டும் கலந்து கொண்டதால் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் 27.10.2016ன்படி 16.11.2016ல் கோரியதில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில், மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 02.12.2016ன்படி 21.12.2016ல் ஏலம் விடப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் இதில் நிதி முறைகேடு ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. திருச்செந்தூர் பேரூராட்சி 16.03.2010 நாளிட்ட அறிவிப்பின்படி 22.04.2010ல் ஏலம் விடப்பட்டு கடை எண். 12 மற்றும் 13 ஆகியவைகளை திரு.ஆசீர்வாதம் என்பவர் ஏலம் எடுத்ததாகவும், மேற்படி அறிவிப்பு விதிமுறைகளின்படி உரிமம் பெற்றவர் உரிமக்காலம் முடிந்தவுடன், சிறப்பு நிலை பேரூராட்சி மன்றக் கட்டிடங்களை, சிறப்பு நிலை பேரூராட்சி எப்படி ஒப்படைத்ததோ அதன்படியே திரும்ப ஒப்படைக்கப்படவேண்டும். இதனடிப்படையில் மேற்படி

கடைகளின் உட்புறத்தில் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. திருச்செந்தூர் பேருந்து நிலையக் கடைகள், ஓட்டல்கள், கழிப்பறை அனைத்தும் அரசு ஆணை எண்.92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/நாள்.03.07.2007ன்படி நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம் எனவும், மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின்பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும் எனவும், இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் எனவும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 5 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் எனவும் (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்) மேலும் மேற்படி கடைகளுக்கு 2017–18 முடிய கடை வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடை வாடகை பாக்கியுள்ள கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டு மறு ஏலம் விடப்பட்டு நிலுவையின்றி வாடகை வசூல் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

7. திருச்செந்தூர் பேருந்து நிலையக் கடைகள், ஓட்டல்கள், கழிப்பறை அனைத்தும் அரசு ஆணை எண்.92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்த் துறை/நாள்.03.07.2007ன்படி நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம் எனவும் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின்பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும் எனவும், இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் எனவும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 5 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் எனவும் (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்) மேலும் மேற்படி கடைகளுக்கு 2017–18 முடிய கடை வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடை வாடகை பாக்கியுள்ள கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டு மறு ஏலம் விடப்பட்டு நிலுவையின்றி வாடகை வசூல் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

8. திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் வைப்பதற்கு பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி தரை வாடகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடையில் பால் தொடர்பான கடைகள் மட்டும் வைக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி பேருந்து நிலையத்தில் சுய உதவிக்குழுக்களுக்கு தற்காலிக கடை வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. திருச்செந்தூர் பேரூராட்சி அலுவலக எதிர்புறமுள்ள தரை தளத்தை தரை வாடகை அடிப்படையில் கடை நடத்திக் கொள்ள பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடை வாடகை நிலுவையின்றி பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. திருச்செந்தூர் பேருந்து நிலையக் கடைகள், ஓட்டல்கள், கழிப்பறை அனைத்தும் அரசு ஆணை எண்.92/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/நாள்.03.07.2007ன்படி நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதின்பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும் எனவும், இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும் எனவும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 5 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படும் எனவும் (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்), மேலும் மேற்படி கடைகளுக்கு 2017–18 முடிய கடை வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடை வாடகை பாக்கியுள்ள

கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டு மறு ஏலம் விடப்பட்டு நிலுவையின்றி வாடகை வசூல் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

11. திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் கல்மண்டப துாண்களுக்கு இடையில் உள்ள காலி இடத்தில் மட்டும் தரை வாடகை அடிப்படையில் கடை நடத்திக் கொள்ள இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடை தரை வாடகை அடிப்படையில் 2017–18 முடிய நிலுவையின்றி வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் உள்ள சன்னதி தெரு, கோவில் தெரு ஆகிய இடங்களில் உள்ள கடைகள் பாதைகளை ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்துபவருக்கு நில அளவையர் மூலம் அளவீடு செய்து ஆக்கிரமிப்புகள் அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடை நடத்துபவர்கள் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வியாபாரிகள் சங்கம் என்ற பெயரில் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு எண். W.P(MD).9779/2013ன்படி வழக்குத் தொடர்ந்து நிலுவையில் உள்ளதாகவும் தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குலசை, தெப்பக்குளம் சாலைகள் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானதாகையினால் மேற்படி துறை மூலம் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறையை குத்தகைக்கு எடுத்த நாள் முதல், பொருட்கள் பாதுகாப்பு அறைக்கு பொருட்கள் பாதுகாப்பிற்காக வராத நிலையில், குத்தகைதாரர் பேரூராட்சிக்கு வாடகை செலுத்தவேண்டிய நிலையில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. 2014, 2015, 2016 ஆம் வருடங்களில் குடிநீர் மற்றும் மின் உதிரி சாமான்கள் வாங்க வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் பொருட்கள் வாங்க விநியோக ஆணை வழங்கப்பட்டு, பொருட்கள் வாங்கி செயல் அலுவலர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு, இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு மேற்படி பொருட்களுக்கான தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பம் பெறப்பட்ட பின்னர்தான் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

15. திருச்செந்தூர் பேரூராட்சி சிறப்பு நிலை அந்தஸ்து கொண்டதாகவும், 10.5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 21 வார்டுகள் மற்றும் 78 தெருக்களை கொண்டுள்ளதாகவும், இப்பேரூராட்சியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் அரசால் அறிவிக்கப்பட்ட நான்கு முக்கிய திருவிழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதினால் இத்திருவிழாவிற்கு லட்சக்கணக்கில் பக்தர்கள் வருகை தருவதுடன் நாள்தோறும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான பாதசாரிகள் வருவதாகவும், இதன் அடிப்படையில் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் பொருட்டு 5 மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இப்பேரூராட்சியில் அமைந்துள்ள 21 வார்டுகளிலும், 68 தள்ளு வண்டிகள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட்டு, ஆலந்தலை வளம் மீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று உரமாக்கப்படுவதாகவும், மேற்படி பணிக்காக மேற்படி சுய உதவிக் குழுக்களுக்கு பேரூராட்சி மூலம் அந்தந்த சுய உதவிக் குழுவின் பெயரில் துாத்துக்குடி மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் பேரூராட்சி மன்ற அனுமதியின்பேரில் தொகை வழங்கப்படுவதாகவும், 8/2017 முதல் 4 சுய உதவிக் குழுக்கள் மட்டும் பணி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16. திருச்செந்தூர் பேரூராட்சி 10.5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 21 வார்டுகள் மற்றும் 78 தெருக்களைக் கொண்டுள்ளதாகவும், இப்பேரூராட்சியில் அருள் மிகு சுப்பிரம்மணியசுவாமி திருக்கோவில் உள்ளதாலும், பெருமளவில் பக்தர்கள் வருகை தருவதாலும், சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரின் அறிவுரையின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்த 5 சுய உதவிக்குழுக்கள் மூலம் மேற்படி பணிகள் செய்யப்பட்டு வருவதாகவும், மேற்படி குழுக்கள் மூலம் 21 வார்டுகளிலும் 68 தள்ளு வண்டிகள் மூலம் வீடு வீடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட்டு, ஆலந்தலை வளம் மீட்பு பூங்காவிற்கு கொண்டு சென்று உரமாக்கப்படுவதாகவும், மேற்படி சுய உதவிக்குழுக்களுக்கு பேரூராட்சி மூலம் சுய உதவிக்குழுவின் பெயரில் மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் தொகை வழங்கப்படுவதாகவும், பேரூராட்சியின் பொது சுகாதார பணிகள் பொதுமக்களின் நலனுக்காக செயல்பட்டு வருவதாகவும் இது வணிக நோக்கத்தில் செயல்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17. திருச்செந்தூர் பேரூராட்சி பகுதியில் வாழும் பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதின் அடிப்படையில் குடிநீர் குழாய் பழுதானதை சரிபார்க்க செலவினம் மேற்கொள்ளப்பட்டு பட்டியல்கள் அனைத்தும் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18. திருச்செந்தூர் பேரூராட்சி அலுவலக மாடியில் டைனிங் ஹால் கட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தம் கோரப்பட்டு, அதில் குறைந்த ஒப்பந்தம் கொடுத்தவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

19. திருச்செந்தூர் பேரூராட்சி கோவில் நகரமாக இருப்பதாலும், அரசால் அறிவிக்கப்பட்ட நான்கு திருவிழாக்கள் நடைபெறுவதாலும், மேற்படி திருவிழாக்களில் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி பெற்று பேரூராட்சி அனுமதி பெற்று பணிகள் முடிக்கப் பெற்றபின்னர் சுகாதார ஆய்வாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் அறிக்கை பெற்று பட்டியல் தொகை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பம் பெற்றே தொகை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

20. திருச்செந்தூர் பேரூராட்சிக்கு எதிர்புறமுள்ள கட்டண கழிப்பறை திறந்த வெளியில் மலம் கழிக்கும் திட்டத்தின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டு நாளிதழில் விளம்பரம் செய்து ஏலம் விடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21. திருச்செந்தூர் பேரூராட்சியில் செலவுகள் அனைத்தும் பேரூராட்சி மன்ற அனுமதியின்பேரிலேயே செலவினம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

22. மனுதாரர் தெரிவித்துள்ள சன்னதி தெருவில் உள்ள நிலம் கோவில் கட்ட ஆக்கிரமிப்பு செய்ததாக கூறி இது தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

23. திருச்செந்தூர் பேரூராட்சி பகுதியில் குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட மின் மோட்டார்களை பறிமுதல் செய்து அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும், மின் மோட்டார்கள் எந்த ஒரு நபருக்கும் திருப்பி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

24. திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் இருந்த உணவகம் யாரும் ஏலம் எடுக்க முன் வராததால் மேற்படி உணவகத்தினை ஐந்து கடைகளாக மாற்றப்பட்டு முறையாக ஏலம் விடப்பட்டுள்ளதாகவும், ஏலம் எடுத்தவர்கள் கடையினை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25. திருச்செந்தூர் பேரூராட்சி பொது சுகாதார ஆய்வாளர் புகாரில் குறிப்பிட்டுள்ள இடத்தினை தள ஆய்வு செய்ததில், உரிய ஆவணங்கள் இருப்பதாக தெரிவித்ததாகவும், இதன் அடிப்படையில் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரியுள்ளதாகவும், ஆவணங்களை தாக்கல் செய்யாத பட்சத்தில் கடையினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

26. திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியரின் உத்திரவின்படி பேரூராட்சிக்குட்பட்ட சாலைகளில் திரியும் கால்நடைகள் பேரூராட்சி பணியாளர்கள் மூலம் பிடித்து குலசேகரன்பட்டினம் கோ சாலையில் ஒப்படைப்பு செய்யப்படுவதாகவும், இதில் மாடு ஒன்றுக்கு ரூ.2,000/– கன்று குட்டிகளுக்கு ரூ.1,000/– மற்றும் பசு கோசாலைக்கு நாள் ஒன்றுக்கு கால்நடை ஒன்றுக்கு ரூ.20/– வீதம் கட்டணம் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

27. மனுவில் தெரிவித்துள்ள திருச்செந்தூர் பேரூராட்சி 18–வது வார்டு உறுப்பினர் திரு.கோட்டை மணிகண்டன் என்பவர் 2011 உள்ளாட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுவுடன் சேர்த்து சொத்து சான்றிதழ் சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி கோப்பு பேரூராட்சி பழைய கட்டிடத்தில் இருந்து புதிய கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்படும்போது காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28. திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய உணவகத்தினை யாரும் ஏலம் கேட்க முன் வராததால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு எண்.W.P.(MD)Nos. 4981 and 4982 of 2010 and W.P(MD) Nos.2,2 and 3 of 2010 ன்படி உணவகத்தை ஐந்து கடைகளாக பிரித்து அதற்கான டேவணித் தொகை மற்றும் ஏல விதிமுறைகளின்படி கடை உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

29. திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய உணவகத்தினை யாரும் ஏலம் கேட்க முன் வராததால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு எண்.W.P.(MD)Nos. 4981 and 4982 of 2010 and W.P(MD) Nos.2,2 and 3 of 2010 ன்படி உணவகத்தை ஐந்து கடைகளாக பிரித்து அதற்கான டேவணித் தொகை மற்றும் ஏல விதிமுறைகளின்படி கடை உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

30. திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய உணவகத்தினை யாரும் ஏலம் கேட்க முன் வராததால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் வழக்கு எண்.W.P.(MD) Nos. 4981 and 4982 of 2010 and W.P(MD) Nos.2,2 and 3 of 2010 ன்படி உணவகத்தை ஐந்து கடைகளாக பிரித்து அதற்கான டேவணித் தொகை மற்றும் ஏல விதிமுறைகளின்படி கடை உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

31. திருச்செந்தூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பொருட்டே ஏற்கனவே இருந்த கடைகள் காலி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

32. திருச்செந்தூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பொருட்டே ஏற்கனவே இருந்த கடைகள் காலி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

33. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ந.க.எண். 89744/94/ப.3/நாள்.15.12.1994, செய்தி மற்றும் சுற்றுலா விளம்பரத்துறை அரசாணை எண்.44(டி)/நாள்.23.02.2013 மற்றும் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.854/நாள். 28.06.2011ன்படி பேரூராட்சி செயல்முறை ஆணை எண்.ந.க.எண்.1684/2008/அ.3/நாள்.01.07.2011ன்படி திரு.கோ. பாலசுப்பிரமணியன், ஜெமினி பப்ளிக் சர்வீஸ், சி.சி.டி.வி. திருச்செந்தூர் என்பவரின் தொலைக்காட்சி பெட்டி விளம்பரம் செய்ய மாதம் ஒன்றுக்கு ரூ.750/– வீதம், ஒளிபரப்பு செய்ய படிக்கட்டில் இயக்க அறை அமைத்துக் கொள்ள மாதம் ஒன்றுக்கு ரூ. 550/– வீதம் 33 மாதங்களுக்கு (ரூ.24,750/– + ரூ.18,150 =

ரூ.42,900/–) செலுத்த செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு தொகையும் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

34. திருச்செந்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் வாடகை கார் ஓட்டுநர்களுக்கு கார் நிறுத்த பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாதம் ஒன்றுக்கு வாகனம் ஒன்றுக்கு ரூ100/– வீதம் 20 வாகனத்திற்கு ரூ.2,000/– வீதம் 12 மாதங்களுக்கு ரூ.24,000/– வருடம் ஒன்றுக்கு அரசாணையின்படி 5 சதவீதம் உயர்த்தப்பட்டு தொகை செலுத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி இடத்திலுள்ள பொதுமக்கள் பயன்படுத்துவதற்கும், வணிக வளாகத்திலுள்ள கடை உரிமையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவும் குடிநீர் இணைப்பு பொது நலன் கருதி பொருத்தப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தில் வெளிச்சம் குறைவாக இருப்பதால் குழல் விளக்கு ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

35. பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட வணிக வாளகத்தில் பரமரிப்பு பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, மேற்படி முறையீட்டு மனுவிற்கான திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 07.12.2018 நாளிட்ட விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர், திருச்செந்தூர் பேரூராட்சி செயல் அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சாட்சி ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான விளக்கங்களை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். மேலும் ஏற்கனவே திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் கடை ஏல குத்தகை வைத்திருந்த நபர்களுக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கடை வழங்கப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் மகன் வைத்திருந்த கடை பேரூராட்சி நிர்வாகத்தால் அப்புறப்படுத்தப்பட்டது தொடர்பாகவும் அப்புறப்படுத்தப்பட்ட கடைக்கு இழப்பீடு கோரியுள்ளது தொடர்பாகவும், அவரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் இது குறித்து இம்முறைமன்ற நடுவத்தால், முறைமன்ற நடுவ சட்டப்படி விசாரணைக்குட்படுத்திடலாகாது என்பதை குறிப்பிட்டு தனியே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர், வருவாய்த்துறையினரின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி அதற்கான அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்படுகிறது.

மேலும், திருச்செந்தூர் பேரூராட்சிக்குட்பட்ட கடைகள் ஏலம் விடுதல் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரால், மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண், Crl.O.P(MD) No. 5582/2014ல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பின்படி, தூத்துக்குடி சரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளரின் கடித எண்.PE.37/2014/RDP/TK/நாள்.08.05.2014 ல் மேற்படி பொருள் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரால் விசாரணை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்தன்பொருட்டு திருச்செந்தூர் பேரூராட்சியில், பேரூராட்சிக்குட்பட்ட கடைகள் ஏலம் விடப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் 08.05.2014ல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இப்பொருள் தொடர்பான விசாரணை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் நிலுவையில் உள்ளதால், மேற்படி துறையின் மூலமே

இம்முறையீட்டு மனு தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்வது உகந்ததாக இருக்குமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 11–ன்படி இப்பொருள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளத் தெரிவித்து சுட்டி அனுப்பப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீடு தொடர்பான ஆவண ஆதாரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் அளித்து தீர்வு காணவும் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 24/1/2019

பெறுநர்.

1.திரு மு. ராமகிருஷ்ணன்,
48/60, தெற்கு புதுத் தெரு,
திருச்செந்தூர்,
தூத்துக்குடி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
திருச்செந்தூர் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ. பி.காலனி, ஜவஹர் நகர்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி – 627007 .

4.துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
தூத்துக்குடி சரகம்,
தூத்துக்குடி.

23/1/19 24/1/19